RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2242s2028

OPEN ACCESS

# பண்டையத் தமிழர் இலக்கியப் பாடல்களில் காணலாகும் தெய்வ வழிபாட்டில் மனித உறவுகள்

**அ. மகாலெட்சுமி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, மீனாட்சி இராமசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தத்தனூர் (அஞ்சல்), உடையார்பாளையம் (வட்டம்), அரியலூர் (மாவட்டம்)-621804, தமிழ்நாடு, இந்தியா.

# Human Relations in The Worship of Deities Found in Ancient Tamil Literary Songs

**A. Mahalakshmi** [a, *]

[a] Department of Tamil, Meenaakshi Ramasamy Educational Institutions, Thathanur (Post), Udaiyarpalayam (Tk), Ariyalur (Districk)–621 804, Tamil Nadu, India

* Corresponding Author: lingothsenthilmahaaparna@gmail.com

Received: 27-06-2022
Revised: 02-10-2022
Accepted: 11-10-2022
Published: 05-11-2022

Check for updates

## ABSTRACT

The Tamils divided the land into five kinds, according to the characteristics of land, and made it a tradition to cherish and enrich nature, realized that the fallen flowers did not stick to the flowers, did not get the days spent, respected the soil, loved the wind, desired the rain, took up life as a life of flowers, plants, vines, coloured birds, sweating, etc., and thought of it as a life mixed with nature. Since literature was a part of the culture, the Sangam poets were rich in grammar and literary richness in ancient literature, which is the best literature that compiles the culture in written form, by organizing it into biographical data that describes the culture of the people. Therefore, by painting the virtues and civilizational character of the ancient Tamil people in their songs without transgressing tradition and unchanging from tradition, the worldly, the psychology, the well-known ones of the values of life in order to be spoken in a sequence, and the moral ideas to be lived in a manner that is to be lived in the praise of the good, the reproach the unwanted ones, and the society which has developed as an expression of the human emotions of the human mind, in the pursuit of the task of the social work of the social and religious human life. A society that has developed as an expression of human consciousness, from the background of religious human life to the equivalent of the fruits of labour in the fulfillment of social duty, still possesses the primitive elements of the various forms of worship, customs, beliefs, and rituals that we carry out, and has grown to the level of individual life, such as ethnic life, and has grown into a society, recognizing the antiquity of human worship, and begin to worship God. The purpose of this article is to briefly see how the man who started the inner fine arts by realizing it by the heart and receiving many benefits from rituals by worshipping the deity and learning many benefits from the songs of ancient Tamil literature has been studied.

**Keywords:** Tamil Literary Songs, Worship, Human Relations, Tradition.

## முன்னுரை

அறவாழ்வையும், சமய வாழ்வையும், தனிமனித வாழ்வையும், பொது மக்கள் வாழ்வையும், அறத்தின் அடிப்படையில் நேர்ந்த முரண்பட்ட வாழ்வையும், நடுநின்று இணைக்கும் வாழ்வைப் பேரற வாழ்வாய் அமைத்துக் காட்டியவர் பழந்தமிழர்கள். உலகம் அல்லவை தவிர்த்து, நல்லவை போற்றி

ஒழுக வழிகாட்டிச் செல்லும் பெரியோரே சான்றோராவார். தெய்வ வழிபாடாயினும், மக்கள் வாழ்க்கையில் நடைபெறும் திருமணம் முதலிய சடங்குகளாயினும் எல்லாம் சான்றோரை முன்னிட்டே ஆற்றப்பெறுகின்றனர். பெரியோர் சென்ற நெறியே பின்புள்ளாருக்கும் மேல்வரிச் சட்டமாக விளங்கும் அறநெறியில் நிறுத்த, அக்காலத்து தமிழரின் தெய்வ வழிபாட்டினால் மனநிறைவு கண்ட மக்களின் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளிலும் சமூகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட கடவுளின் வழிபாடும், மனித உறவுகளின் இயல்புகளையும் மையப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## வேத வேள்வி

செந்நீர்ப்பேணி வேள்வி செய்து வழிபட்டவர்கள் மூவேந்தர், அந்தணர், முனிவர், பாரி, அதியமான் முதலியோர்களும் அடங்குவர். வேள்வி நடத்துவதற்கு உரியராகக் கருதப்படுபவர் அந்தணர். இவ்வேள்வியை நடத்தியவர்களின் பலர் நற்புதல்வர்களைப் பெற்றதாகவும், வேந்தர் இழந்தச் செல்வங்களைப் பெற்றதாகவும், இறந்த பிறகு சொர்க்கம் செல்லும் நம்பிக்கையினாலும் வேள்வி நடத்தியுள்ளதையும் அறிய முடிகிறது. பல்யானைச் செல்கெழு குட்டுவன், செல்வக்கடுங்கோ வாழியாதன், பெரும் சேரலிரும்பொறை சோழன் இராச சூயம் வேட்ட பெரு நற்கிள்ளி வேள்வி நடத்தி தேவர்களையும் ஆள்வினை வேள்வியால் விருந்தளித்து மக்களையும் பேணினான். “பாலைக்கௌதமனார் என்னும் புலவர் வேண்ட பத்துப் பெருவேள்விகளை வேட்பித்தவனும் இவனே.” என பதிற்றுப்பத்துப் பாடலால் அறிய முடிகிறது. முனிவர்களுள் சிறந்தவராகிய முனிவர் பரசுராமர், யாவராலும் காணக்கூடாத தலைவியின் எழில் நலத்திற்கு அரிதின் முயன்று வேள்வி செய்ததால் வேள்விக் குண்டத்துத் தூண் உவமிக்கப்பட்டிருக்கிறது” “மன்மருங்கு அறுத்த மழுவாள் நெடியோன் முன்முயன்று அறுத்த மழுவாள் நெடியோன்" அகநானூறுப் பாடலால் அறிய முடிகிறது. “உபநிடதனமென்னும் மறைநூலைக் கற்ற அந்தணர்களின் வேள்விக்காக அரசர்கள் நிலங்களையும் பல்வேறு பொருளுதவிகளையும் செய்ததாகச் சங்கப்பாடலால் அறிய முடிகிறது (Subramanian, 2012).

## கடவுளர்கள் வழிபாட்டால் பெற்ற பயன்கள்

வானுலகத் தேவர்களின் அதிபதியான இந்திரனை வழிபடுவோர் வீர சுவர்க்கம் அடைவர் எனவும், சுவர்க்க உலகிற்கு வருவோரை இந்திரன் பிறர் தேவர்களோடு சென்று வரவேற்பான் என்பது ஒரு நம்பிக்கை. 'ஆய்வள்ளல் இறந்த போது உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடிய கையறுநிலை பாடலில் கற்பனையாக, "போர்ப்புறு முரசம் இறங்க" என்று புறநானூற்றுப் பாடல் அறிய முடிகிறது.'அந்நாளில் பேரூர்களிலே இந்திரனுக்கு விழாக்கொண்டாடி வந்தனர். இது இந்திரவிழா என வழங்கப்பட்டதெனவும் இவ்விழாவிற்குப் பூக்களை மிகுதியாகப் பயன்படுத்தியதை, "இந்திர விழாவிற் பூவின் அன்ன புன்தலைப் மேடை வரிநிழல் அகவும்" ஐங்குறுநூறுப் பாடலால் அறியலாம். இவ்விழாவனது பருவ மழை பெருவித்து நாடு செழிப்படைந்து, மக்கள் செல்வச் செழிப்பாக வாழவுமேயாகும் தேவர்கள் பிரமனிடத்தில் தோன்றியவர்கள், வானுலகில் வாழ்பவர் எனப் பரிபாடலால் அறியலாம். மேருமலையில் உறைபவர் இத்தேவர்களையும், இம்மலையையும் காப்பவர் இந்திரனே என்னும் நற்றிணைப் பாடலால் அறியலாம்' பூவுலகில் நல்வினைச் செய்வோர் பிறர்க்கு ஈறு இசைபடந் வாழும் நல்லோர், பிறர்க்கு வானுலகம் கிட்டுவதற்கு அரியதாம். வானுலகில் வாழும் தேவர்களை வழிபடும் இவ்விழாவானது மக்கள் வாழவேயாகும். இத்தேவர் வாழும் அரும்பெறல் உலகத்தை அடைவர்” என்பதனை அகப்புறப்பாடலால் அறிய முடிகிறது. மக்கள் யமனைத் தெய்வ வழிபாடாக மேற்கொள்ளாவிடினும், குறித்தக் காலத்தில் வந்து உயிர்களைக் கொண்டு செல்லுதலில் சிறிதும் தவறாதவன் நியதிப்படியே தனது அழிவு வேலைகளைச் செய்து நீதிக்கே தலைவனாக விளங்கி, “தருமன்” எனப் போற்றப்படுவதையும் “உண்மை தெரிந்திருப்பினும் அவன் செய்யும் அழிவினால் உலகோர் சபித்தேலும் செய்வதனை” புறப் பாடலால் அறிய முடிகிறது (Manikkavasagan, 2014).

## திருமாலின் பெருமாண்புகள்

வேதம் போற்றிப்புகழும் வழுப்பொருள் திருமால் நாவல் அந்தணர் அருமறைகளில் பலப்படியாகத் துதித்துப் போற்றப்படுவன் குன்று தோறும் ஆடும், குழகன் முருகன் போல திருமாலும் குன்று உறை தெய்வமே. திருமால் திருப்புகழைப் பாடிப் பரவுவார் உயர்ந்த ஞானியராவர். இவர்கள் இந்திரியர் ஐந்தையும் மயக்கமுற நீக்கியவராவர். 'தன்னைத் துதிக்கும் அன்பர்களின் மயக்கங்களைப் போக்குவீர் என்பதனை, பரிபாடலால் அறிய முடிகிறது" மேலும், 'மாலை வணங்குபவர் இருவினைத் தவிர்த்து சுவர்க்கத்தையும் தமக்கு உரிமையாகப் பெறுவர்" என்பதனைப் பரிபாடலால் அறியமுடிகிறது. இதனையே, "ஆயர் வாழும் சிறுகுடிலின் மன்றத்தில் ஆட்டத்திற்கு ஏற்ற பண் அமைத்து தாள விசையுடன் ஒருவரை ஒருவர் தழுவி நின்று கைக்கோர்த்து ஆயப்பெறுவதை" கலித்தொகைப் பாடலால் அறியலாம் (Puliyur Kesigan, 2008).

## நிலமகள் வழிபாடு

சங்க காலம் முதல் இந்நாள் வரையில் விவசாயம் செய்யும் முன்பும், வீடு கட்டும் பொழுதும், எந்தவொரு கட்ட வேலையைச் செய்ய வேண்டுமாயினும் நிலமகளைப் பூசைச் செய்து பூ மண்டலத்தைப் பெண்ணாகக் கூறுவது மரபாகும். வராக கற்பகத்தில் புனலிடை மூழ்கிக் கிடந்த நிலமகளைத் திருமால் ஆதிவராகமாக வந்து, தன் கொம்பிடையில் தேர்ந்தெடுத்து வெளிக்கொணர்ந்து மணம் புரிந்ததாக" பரிபாடலால் அறிய முடிகிறது. இதனையே, 'இத்திருமகள் பிறர் மார்பை மறுத்ததற்கு ஏதுவாக பரந்த மார்பினையுடையான் கரிகாலனாகிய மாலுக்குள் உறைந்து செல்வத்திற்கு அதிபதியாகி"'மக்கள் வழிபாட்டின் முதன்மை கருத்தின் விளைவுகளாய் வாழ்கிறாள் எனக் கருத முடிகிறது" (Manikkavasagan, 2014).

## முருகன் வழிபாடு

'முருகனை வணங்கும் பக்தர்கள் இம்மைப் பயன் ஒன்றையே அவன் இரத்தல் இல்லை அவனிடத்துத் தாம் செலுத்தும் அன்பையும் பேரருளையும், அறத்தையும் இரந்து வேண்டுகின்றனர்' என்பதைப் பரிபாடலிலும், முருகனின் ஆறுபடைகளிலும் பெருமான் திருவடியை அடைந்து முருகனின் அருளினைப் பெறுவதாக முருகாற்றுப் பாடலாலும், அறியலாம். குறிஞ்சிப்பாட்டு அடிகளிலும், திருப்பரங்குன்றத்திலும் மாலை தோறும் பலராகச் சேர்ந்து வழிபடுவோர் தேவருலத்தையும் விரும்பார் என்கிறார்கள் (Subramanian, 2010).

## முக்கண்ணன் வழிபாடும், அம்மன் தரிசனமும்

முருகனை ஈன்றளிந்த முக்கண்ணனை வணங்குபவர் "மலர்ந்து மணம் பரப்பும் சண்பகமலர் திருமேனியாய் உமையம்மையோடு தரிசனம் பெறுவோர்மென்பதை" கலித்தொகைப் பாடலிலும், இதனையே, "முக்கண்ணனை வாழ்நாளில் வழிபட்டுவோருக்கு திருமேனி போன்றே சிவந்து காணப்படுவது திருமுடியில் இலங்கும் சடை, நெருப்பை ஒத்துக் காட்சியளிப்பதாகவும்" புறநானூற்றால் அறியலாம் (Palaiyan, 2008).

## வழிபாடும் சடங்குகளும்

மக்கள் செய்துவரும் வழிபாட்டு விழாவை முந்தையோர் முறைப்படி, பரம்பரை வழக்கமாகச் செய்து வரும் செயலே சடங்காகும். நூல் முறையாலும் சான்றோர் நெறியாலும் வழிவழியாக முதியோர் ஏனையோர்க்கு வழிகாட்ட பின்பற்றவையே என்ற செய்தியைப் பரிபாடப்பாடலால் அறியலாம் (Sangam Pillai, 2003).

## முடிவுரை

இவ்வுலகில் உழைக்கும் உத்தமர்கள் ஒரு சிலர் தவிர , பலர் எங்கோ ஒரு மூலையில் இருந்து கொண்டு தமக்கென வாழாது, பிறர்க்காகத் தமது உழைப்பினை நல்குவதால் இவ்வுலகம் நிலைப்பெற்றிருக்க, அனைவரும் வேற்றுமையில் ஒற்றுமையாய், தெய்வங்களின் வழிபாட்டிலும், சடங்குகளிலும் மனிதர்கள் ஒன்றிணைந்து, மக்கள் விரும்பும் பெருங்குறிக்கோள்களையும், பரந்தஉள்ளத்தையும் அறிந்தவர் கடவுளென்பதையும் முற்றிலும் உணர்ந்தவராய் ,இறை நம்பிக்கையில் ஈடுபட்டு, வழிபாடுகள் மூலம் இறைவனின் உறவுகளாய் அந்நாள் முதல் இந்நாள் வரை தம் வாழ்நாளில் இறையோடு வழிபாடுகள், சடங்குகள் வாயிலாக மக்கள் ஒன்றிணைந்து திருவிழாக்கள் நடத்தி, ஒற்றுமையாய் மக்கள் உள்ளத்தால் இறைக்கண்டு மகிழ்வுறுவதைக் கண்கூடாகக் காண முடிகிறது.

## References

Manikkavasagan, G. (2014) Purananuru Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India.

Palaiyan, A.P. (2008) Purananuru, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur Kesigan, (2008) Sanga Ilakkiyam, Paari niliyam, Chennai, India.

Sangam Pillai, (2003) Sangathamilarin Valipadum Sadangukalum, International Institute of Tamil Studies, Chennai, India.

Subramanian, (2010) Sanga Ilakkiyam (Ettuthogai Moolamum Uraiyum), Paari niliyam, Chennai, India.

Subramanian, (2012) Sanga Ilakkiyam (Pathupattu Moolamum Uraiyum), Paari niliyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License